[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 25

மாகாண மாநாட்டில், பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான வேலை வாய்ப்புகளும், சொத்துரிமையும் வழங்க வேண்டுமென்ற கருத்தை நினைவிற்கொண்டு அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் எழும், வேலை வாய்ப்புகளில், 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கப் படுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளி களிலும், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணி இடங்களிலும், மகளிரே நியமிக்கப்படுவர். வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு மட்டும் போதாது. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கல்வி வாய்ப்பு தேவை. எனவே, தேர்தல் வாக்குறுதிக்கேற்ப, ஏழை நடுத்தர வர்கக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு, இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி, வரும் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

80. மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங் களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000 உதவித் தொகை வழங்கப்படும். இத் திட்டத்திற்கு நிதி நிலை அறிக்கையில் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

81. நகர்ப் புறத்திலும், கிராமப் புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள், கர்ப்ப வதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மேலும்